


**15.06.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **சைப்ரஸ் அதிபர் மற்றும் அந்நாட்டு வர்த்தக பிரதிநிதிகளுடன்** பிரதமர் திரு.நரேந்திரமோடி இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

2. **நாட்டின் காற்றாலை மின் உற்பத்தி திறன்** 51.5 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

3. **காவிரி டெல்டா மாவட்டங்களின் குறுவை** சாகுபடிக்காக கல்லணையிலிருந்து முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்றுமாலை தண்ணீர் திறந்துவைக்கிறார்.

4. **கன்னியாகுமரி நெல்லை மாவட்டங்களில் மழை** காரணமாக நீர்நிலைகள் நிரம்பி வருவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. **ஸ்காப்பியா சர்வதேச டேபிள் டென்னிஸ் ஆடவர்** இரட்டையர் இறுதியாட்டத்தில் **Manav Thakkar, Manush Shah** இணை இன்று களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖

**பிரதமர்**

சைப்ரஸ், கனடா, குரேசியா நாடுகளுக்கு 5 நாள் அரசுமுறை பயணமாக பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று புறப்பட்டார்.

இப்பயணம் குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் எல்லை தாண்டிய தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவிற்கு ஆதரவளித்த நட்பு நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் நல்வாய்ப்பாக இது அமையும் என்றார்.

சைப்ரஸ் மத்திய தரைக்கடல் பகுதி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வரலாற்று பிணைப்புகளை மேம்படுத்த இப்பயணம் வழிவகுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்பயணத்தின் முதல் கட்டமாக சைப்ரஸ் லிமஸ்சால் நகரில் அந்நாட்டு அதிபர் நிக்கோஸ் கிறிஸ்டோ மற்றும் வர்த்தக தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை

மேற்கொள்ளும் பிரதமர், கனடாவில் நாளை நடைபெறவுள்ள ஜி-7 உச்சி மாநாட்டில் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து பல்வேறு நாட்டு தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

இதனிடையே சர்வதேச யோகா தினம் வரும் 21-ம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில் சைப்ரஸில் யோகா நிகழ்வுகள் முனைப்புடனும், உற்சாகத்துடனும் மேற்கொள்ளப்படுவதாக அந்நாட்டிற்கான இந்திய தூதர் திரு.மனீஷ் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖

**பிரல்ஹாத் ஜோஷி**

**நாட்டின் காற்றாலை மின் உற்பத்தி திறன்** கடந்த ஆண்டை காட்டிலும் 10.5 சதவிகிதம் அதிகரித்து 51.5 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளதாக மத்திய புதுப்பிக்கத் தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

உலக காற்றாலை தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் வரும் 2030-ம் ஆண்டிற்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறன் 500 ஜிகாவாட் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளதாக கூறினார்.

காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் கார்பன் உமிழ்வை குறைக்கும் வகையில், சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்உற்பத்தி துறையில் நாடு நிலையான வளர்ச்சியை எட்டி வருவதாக தெரிவித்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் சூரிய மின்உற்பத்தி திறன் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடைந்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖

**ஹெலிகாப்டர் விபத்து**

**உத்ரகாண்ட் மாநிலம் டேராடூனிலிருந்து கேதார்நாத்** நோக்கி சென்ற ஹெலிகாப்டர் இன்று அதிகாலை கவுரிகுண்ட் வனப்பகுதியில் விபத்திற்குள்ளானதில் விமானி உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்தனர்.

அனைத்து உடல்களும் மீட்கப்பட்டுள்ளதாக மாநில பேரிடர் மீட்புத்துறை தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து விமான விபத்து புலனாய்வு பிரிவு விசாரணை மேற்கொண்டு வருகிறது.

❖❖❖❖❖

**விமான விபத்து**

**அஹமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தோரில்** 31 பேரின் டி.என்.ஏ. மாதிரிகள் இதுவரை ஒப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அஹமதாபாத் சிவில் மருத்துவமனை கூடுதல் கண்காணிப்பாளர் டாக்டர் ரஜ்னீஷ் பட்டேல் தெரிவித்துள்ளார்.

இதுவரை அடையாளம் காணப்பட்ட 12 பேரின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் காவிரி டெல்டா** மாவட்டங்களின் குறுவை சாகுபடிக்காக கல்லணையிலிருந்து தண்ணீரை இன்று திறந்து வைக்கிறார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

முன்னதாக திருச்சி விமான நிலையம் வந்தடைந்த முதலமைச்சரை மாநில அமைச்சர்கள் திரு. கே.என்.நேரு, திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

முதலமைச்சர் இன்றிரவு தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி சிலையையும் திறந்துவைக்க உள்ளார்.

தஞ்சையில் நாளை நடைபெறும் அரசு விழாவில் 61 ஆயிரம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்குகிறார்.

❖❖❖❖❖

**தண்ணீர் திறப்பு**

**தேனி மாவட்டம் வைகை அணையிலிருந்து** பாசனத்திற்கான தண்ணீரை மாநில அமைச்சர்கள் திரு.ஐ.பெரியசாமி, திரு. மூர்த்தி ஆகியோர் இன்று திறந்து வைத்தனர்.

இதன்மூலம் மதுரை திண்டுக்கல், மாவட்டங்களில் உள்ள 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனவசதிபெறும்.

❖❖❖❖❖

**முதலமைச்சர்**

தமிழக காவல்துறையில் மகப்பேறு விடுப்பு முடிந்து பணிக்கு திரும்பிய 209 பெண் காவலர்களுக்கு அவர்கள் விரும்பிய மாவட்டத்திற்கு பணியிட மாறுதல் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 3-ம் தேதிவரை பணியிடமாறுதல் கோரி விண்ணப்பித்த அனைவருக்கும் இடமாறுதல் வழங்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖

**முதலமைச்சர் நிவாரணம்**

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி பார்வதிபுரத்தில் அண்மையில் ஏரியில் மூழ்கி உயிரிழந்த ஒருவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

❖❖❖❖❖

**தேர்வுகள்**

**தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்** நடத்தும் குரூப் 1 மற்றும் குரூப் 1-A முதல்நிலை தேர்வுகள் இன்று நடைபெற்றன.

துணை ஆட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர், வணிகவரி உதவி ஆணையர் உள்ளிட்ட பணியிடங்களுக்கான இத்தேர்வை மாநிலம் முழுவதும் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் எழுதினர்.

திருச்சி மாவட்டத்தில் 37 மையங்களில் நடைபெற்ற இத்தேர்வை 10 ஆயிரத்து 42 பேர் எழுதினர்.

இத்தேர்வு முடிவுகள் 2 மாதத்தில் வெளியிடப்படும் என **TNPSC** தலைவர் திரு.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், நடப்பாண்டு இதுவரை 10 ஆயிரத்து 227 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தூத்துக்குடி விக்டோரியா CBSE பள்ளி, SAV மேல்நிலைப்பள்ளி ஆகிய மையங்களை ஆட்சித் தலைவர் திரு.இளம்பகவத் நேரில் ஆய்வுசெய்தார்.

தர்மபுரி அரசு கலைக்கல்லூரி தேர்வுமையத்தை ஆட்சியர் திரு.சதீஷ் பார்வையிட்டார்.

❖❖❖❖❖

**எழுத்தறிவு திட்ட தேர்வு**

**தமிழகத்தில் நடப்பாண்டிற்கான புதிய பாரத** எழுத்தறிவு தேர்வு இன்று நடைபெற்றது.

அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு திறன்களை பயிற்றுவிக்கும் வகையில் 15 வயதிற்கு மேற்பட்டோருக்கு மாநிலம் முழுவதும் 30 ஆயிரத்து 191 மையங்களில் கடந்த நவம்பர் மாதம் முதல் பயிற்சி அளிக்கப்பட்டது.

நாகை மாவட்டத்தில் இத்தேர்வை 15 லட்சத்திற்கும் அதிகமானோர் எழுதியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

**வானிலை**

**நீலகிரி, கோவை, தென்காசி, தேனி, திருநெல்வேலி,** கன்னியாகுமரி, திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அடுத்த சிலமணிநேரங்களில் மிதமான மழைபெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖

**அணைகள்**

**தமிழக தென் மாவட்டங்களில் பெய்து வரும்** மழைக்காரணமாக நீர்நிலைகள் நிரம்பி வருவதையடுத்து கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**கன்னியாகுமரி மாவட்டத்தில்** அண்மை மழைக்காரணமாக அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதை அடுத்து குழித்துறை, தாமிரபரணி ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்ச்ரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

**தென்காசி மாவட்டத்தில் நேற்றிரவு பெய்த** கனமழை காரணமாக குற்றால அருவிகளில் ஏற்பட்டுள்ள காட்டாற்று வெள்ளம் காரணமாக சுற்றுலா பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு பவானி சாகர்அணைக்கு வரும் நீரின் அளவு இன்று வினாடிக்கு 5 ஆயிரத்து 577 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 83.6 அடியாக உள்ளது.

❖❖❖❖❖

**ஒகேனக்கல்**

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று நீர்வரத்து** வினாடிக்கு 6 ஆயிரத்து 500 கனஅடியாக இருந்தது.

**இந்நிலையில்** விடுமுறை தினத்தை ஒட்டி அங்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖

**மலை ரயில்**

**யுனெஸ்கோ பாரம்பரிய சின்னமாக** அங்கீகரிக்கப்பட்ட நீலகிரி மலைரயில் சேவை தொடங்கப்பட்ட 126-ம் ஆண்டு நிறைவையொட்டி, பயணிகளுக்கு இன்று இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖

**கோவில்**

**தஞ்சை மாவட்டம் பட்டீஸ்வரம் அருள்மிகு** ஞானம்பிகை சமேத தேனுபுரீஸ்வரர் திருக்கோவிலில் திருஞானசம்மந்தர் முத்துபல்லக்கு விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

❖❖❖❖❖

**டேபிள் டென்னிஸ்**

**மெசிடோனியாவில் நடைபெறும் ஸ்காப்பியா** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் இறுதியாட்டத்தில் இந்தியாவின் **Manav Thakkar, Manush Shah** இணை - தென்கொரிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖

**டென்னிஸ்**

**லண்டனில் நடைபெறும் ஏ.டி.பி. டென்னிஸ் ஆடவர்** இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா, பெல்ஜியத்தின் சான்டர் கிலி இணை - இந்தியாவின் யூகி பாம்ப்ரி, அமெரிக்காவின் Galloway இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖